தேதி.16.06.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.321/2023 திரு.லிங்கராஜ், த/பெ.முனியப்பன் வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

பிரதிவாதி தமிழ்ச்செல்வி என்பவர் எனது தங்கை தேவியின் வீட்டில் சிறுமுகையில் குடியிருந்ததால் தெரியும் என்றால் சரிதான். எனது தங்கை தேவிக்கும், பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் இடையே கருத்துவேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. எனது தங்கைக்கும், பிரதிவாதிக்கும் இடையே பணம் கொடுக்கல், வாங்கல் உள்ளது என்றும், அதனால் பத்திரங்களை வாங்கி வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி தமிழ்ச்செல்வி என்னிடம் எந்த தேதியில் எங்கு வைத்து பணம் வாங்கினார் என்றால் சரவணக்குமாருக்கு 20.07.2021ம் தேதியன்று எனது வீடான சத்தியமங்கலம் தாலுக்கா, கொமராபாளையத்தில் வைத்து கொடுத்தேன். எத்தனை ரூபாய் கொடுத்தேன் என்றால் ரூ.6,80,000/-ம் கொடுத்தேன். அப்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் பிரதிவாதி, பிரதிவாதியின் கணவர், சரவணக்குமாரின் அப்பா, அம்மா, எனது தங்கை ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். பணம் கொடுக்கும் போது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் காலை 11.30 மணியிருக்கும். என்ன காரணத்திற்காக கடன் கேட்டார் என்றால் வண்டி பைனான்ஸில் இருப்பதாக சொல்லி கடன் கேட்டார். தாவா கடனுறுதிசீட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு அதற்கு முன்னால் எவ்வளவு நாட்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் பணம் கொடுக்கும்போது பூர்த்தி செய்யப்பட்டது. அதில் என்ன வட்டி விகிதம் என்று

எழுதப்பட்டுள்ளதா என்றால் ரூ.100க்கு இரண்டு ரூபாய் என்று எழுதப்பட்டுள்ளது. கடனுறுதி சீட்டு எந்த கலர் பேனாவினால் எழுதப்பட்டது என்றால் புளூ கலர் பேனாவினால் எழுதப்பட்டது. கடனுறுதி சீட்டில் எத்தனை கையெழுத்துக்கள் செய்தேன் என்றால் ஒரு கையெழுத்து ஒரு ரேகை வைத்துள்ளேன். கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என்றும், நான் எனது தங்கை தேவியிடமிருந்து பிரதிவாதியின் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தை மாதிரியாகக்கொண்டு மோசடியாக இவ்வழக்கு கடனுறுதி சீட்டு தயார் செய்யப்பட்டு தங்கையின் தூண்டுதலின் பேரில் இவ்வழக்கையும், பிரதிவாதியின் கணவரின் மீது அ.வ.எண்.230/2023 என்ற வழக்கையும் போலி ஆவணம் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை பிரதிவாதியுடையது தான் என்பதை நிரூபணம் செய்ய தாவா கடனுறுதி சீட்டை நிபுணருக்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. நான் இந்தப்பிரதிவாதியின் கணவரிடமிருந்து அசல், வட்டி எதுவும் தரவில்லை என்று கூறும்பட்சத்தில் மீண்டும் ஒரு வருடம் கழித்து பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். எனக்கும் இந்த பிரதிவாதிக்கும் எந்தவித மறுபயனும் ஏற்படவில்லை என்றும், எனது தங்கையின் தூண்டுதலின் பேரில் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு

சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் பிரதிவாதி எங்கு குடியிருந்தார் என்றால் மேட்டுப்பாளையம் தாலுக்கா, சிறுமுகையில் இருந்தார். அங்கிருந்து தான் வந்து பிரதிவாதி வாங்கினார். அதேபோல் பிரதிவாதியின் கணவர் சரவணக்குமாருக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் 15.05.2020ம் தேதியிலும் அவர் சிறுமுகையில் தான் குடியிருந்தார் என்றும், அங்கிருந்து வந்து தான் பிரதிவாதியின் கணவர் கடன் பெற்றார் என்று கூறுகிறேன். நான் இவ்வழக்கில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 20.07.2021ம் தேதியிலும் மற்றும் இந்த பிரதிவாதியின் கணவர் சரவணக்குமாரக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 15.05.2020ம் தேதியிலும் உலகம் முழுவதுமே கொரோனா தொற்று பாதிப்பினால் பாதிக்கப்பட்டு இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், அப்போது போக்குவரத்திற்கு அரசால் தடை விதிக்கப்பட்டிருந்தது என்றும், நோய்தொற்று தீவிரமாக பரவி வந்த அந்தக்காலக்கட்டத்தில் மேட்டுப்பாளையம் தாலுக்கா, சிறுமுகையில் இருந்து எங்கள் வீடு உள்ள சத்தியமங்கலம் தாலுக்கா, கொமராபாளையத்திற்கு பிரதிவாதியும், அவரது கணவரும் நேரில் வந்து கடன் பெற்றார்கள் என்பது ஏற்புடையது அல்ல என்றும், நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.321/2023</u>

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 16–ஆம் நாள் வா.சா.2 சாட்சி திரு.சங்கர் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, எம்.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சங்கர் | தொழில் | : |
| த/பெ | : ஆறுமுகம் | கிராமம் | : சிறுமுகை |
| வயது | : | தாலுக்கா | : மேட்டுப்பாளையம் |

<u>வா.சா.2 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். வாதி தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு இல்லை.</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள லிங்கராஜ் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் வாதியின் தங்கையின் மகளை நான் திருமணம் செய்துள்ளேன். வாதியின் தங்கை பெயர் தேவி என்றால் சரிதான். தேவி எனது மாமியார் என்றால் சரிதான்.

எனது மாமியார் வீடு எங்கு உள்ளது என்றால் சிறுமுகை. அங்கு தான் பிரதிவாதியும், பிரதிவாதியின் கணவரும் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது மாமியாருக்கும், பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் கணவருக்கும் இடையே வீட்டை காலி செய்வது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. எத்தனை ரூபாய் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் சிறுமுகையில் குடியிருந்தேன். அங்கிருந்து தான் வாதி பிரதிவாதிக்கு கடன் கொடுத்தார். பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் 20.07.2021ம் தேதியாகும். 20.07.2021ம் தேதியில் யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், வாதி, பிரதிவாதி, பிரதிவாதியின் கணவர் ஆகியோர்கள் இருந்தோம். 20.07.2021ம் தேதியன்று சரவணக்குமாரும் அவரது மனைவியும் கடன் கேட்கவும் இல்லை, கடன் பெறவும் இல்லை என்றும், மேற்படி தேதியில் கடனுறுதி சீட்டு எழுதப்படவும் இல்லை என்றும், எனது மாமியார் தேவியின் தூண்டுதலின் பேரில் நானும், எனது மாமியாரின் சகோதரர் வாதியும் கூட்டு சதி செய்து இந்த போலியான தாவா கடனுறுதி சீட்டை பிரதிவாதியின் பெயரில் போர்ஜரியாக தயாரித்து தாக்கல் செய்து அதன் அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் பிரதிவாதியும், பிரதிவாதியின் கணவரும் ஊரடங்கு உத்தரவினால் வாதியின் வீட்டிற்கு வரவில்லை என்றும், கடன் பெறவும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.